අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.l

මගේ යොමුව எனது இல. My Ref. ED/09/12/06/05/02

ඔබේ යොමුව உமது இல. Your Ref.

දිනය திகதி Date 2024.05.27

அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்,
அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து பிரிவேனாதிபதிகள்
அனைத்து அரச பாடசாலைகள் மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்,

க.பொ.த (சாதாரண தர) பரீட்சை நிறைவடைந்த உடன் க.பொ.த (உயர் தர) வகுப்புக்களை ஆரம்பித்தல்.

மேற்படி விடயம் தொடர்பில் 2024.05.15ம் திகதியன்று வெளியிடப்பட்ட இல. 20/2024 சுற்றுநிருபத்திற்கு மேலதிகமானது. குறித்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு மேலதிகமாக இந்த முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளையும் பின்பற்றுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- மாணவர்கள் க.பொ.த உயர் தர) பாடத்துறைகளுக்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்ட காலப் பகுதியினுள் வருகை தந்த நாட்களின் எண்ணிக்கையானது, க.பொ.த (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றும் போது 80% சதவீத வரவுக்காக கருத்தில் கொள்ளப்படும்.

- க.பொ.த (சாதாரண தர) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த (உயர் தரத்தில்) கற்பதற்காக வேறு பாடசாலையொன்றிற்கு அனுமதி பெற்றுக் கொள்ளும் போது இந்த தற்காலிக இணைப்புக்கு அமைய ஏதேனும் ஒரு பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டு கற்றிருப்பது முன்னுரிமை வழங்கப்படும் விடயமாக கருத்தில் கொள்ளப்படும்.

  அதன் படி, மாணவர்கள் க.பொ.த (சாதாரண தர) பெறுபேறுகளின் படி வேறு பாடசாலையொன்றிற்கு அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில், இணைப்புக் கால எல்லையினுள் பாடசாலை வரவு மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை, தற்காலிகமாக இணைப்பு பெற்றுள்ள பாடசாலை அதிபர்கள் வழங்க நடவடிக்கையெடுத்தல் வேண்டும் என்பதுடன் அதனை மேலதிக தகுதியொன்றாக கருத்தில் கொள்ள வேண்டும்.

- அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் க.பொ.த (சாதாரண தர) மாணவர்களுக்காகவும் இந்த முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

அத்துடன், மேற்படி 20/2024 சுற்றுநிருபத்தின் 1.7 மற்றும் 1.8 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வசதிகள் மற்றும் சேவைகள் கட்டணம், சீருடைகள் மற்றும் மாணவர் விடுகைப் பத்திரம் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

ஜே.ஏம். திலகா ஜயசுந்தர
செயலாளர்

மாண்புமிகு அமைச்சர் கௌரவ அமைச்சர் Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

செயலாளர் செயலாளர் Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.l

CamScanner